# நான்

உளவியல் மஞ்சரி

ஐப்பசி - புரட்டாசி 1982

மலர்; 8

இதழ்; 5

விலை; ரூபா 2.00




வாழுங்கள்! வாழவிடுங்கள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த இதழ்..........

## தலைமைத்துவம்

- கதைகள்
- கவிதைகள்
- கட்டுரைகள்
- கடிதங்கள்

இன்னும் இதர சுயபடைப்புக்களை உடன் அனுப்புங்கள்

முகவரி; "நான்"
புனிதவளனார் குருமடம்
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

உள்ளே..........


| | |
|---|---|
| வசந்தத்தில் ஒரு வானவில்? | 1 |
| மனம் சாய்ந்து போனால் | 3 |
| நம் நாட்டைப் பொறுத்தவரை மது விலக்கைச் சட்டரீதியாக | 9 |
| மது விலக்கைச் சட்டரீதியாக அங்கீகரிப்பது அவசியமானது | 12 |
| குடிப்பழக்கம் | 14 |
| போதை வந்த போது | 17 |
| கைதியின் கைதியே | 20 |
| போதைப் பொருட்கள் | 21 |
| ஏன் இந்த வாழ்க்கையடா | 22 |


## மாதிரி சந்தாப்படிவம்

பெயர்.........................................

விலாசம்.........................................

ஒரு வருட 'நான்' சந்தாவாக ரூபா 13/- காசுக்கட்டளை
தபால் கட்டளை காசோலை மூலம் இத்துடன் அனுப்பு
கிறேன்.

திகதி.......................... கையொப்பம்,

குறிப்பு: பணம் பெறுபவர் 'நான்' ஆசிரியர்
பணம் பெறும் கந்தோர்: அம்பிட்டி.


ஆசிரியர்: வின்சன் பற்றிக் O. M. I.
இணை: ஜீவா போல்
துணை: செபஸ்ரியன் & M, S. குரூஸ்
அமைப்பு; ஸ்ரனி அன்ரனி
ஆலோசகர். விக்ரர் குரூஸ் M. A. Ph. D.

முகவரி: "நான்"
அ, ம. தி. பயிற்ச்சியகம்
அம்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தத்தில் ஒரு வானவில்?



வாழ்க்கை என்ற வசந்த காலக் கோலம் வானில் விழுந்த கோடுகளாய் மாறுகின்றது மனிதர்கள் என்ற வண்ண மலர்கள் உதிர்ந்த பூக்களாய் வாடி வதங்குகின்றன கோவிலைப் போன்று புனிதமாகப் பேணிவளர்க்கப்பட வேண்டிய குடும்பங்களில் பலரும் பரிதாபப் படக்கூடிய சோக நாடகங்களாக அரங்கேறுகின்றன

இத்தனைக்கும் மூலகாரணம் மனிதன் மதுபோதையினால் மதியைப் பறிகொடுத்து வாதைப்படுவதேயாகும்.

இதுதான் தன் தலைவிதி என்று நிலைகுலைய மதிமயங்கிக் குடித்துப் போட்டு நாலு கால்களில் தவழ்ந்து செல்லும் ஒரு சிலர் மனைவியையும் பிள்ளைகளையும் அடித்துத்துன்புறுத்திச் சித்திரவதை செய்கின்றார்கள் இவ்விதழில் செல்வி இஸ்மாலிகா, குடிகாரக் கணவன் ஒருவனது கொடூரத்தை ஒரு கதை வடிவில் வர்ணிக்கின்றார். இத்தகைய கொடுமை எப்பெண்ணுக்கும் ஏற்படக் கூடாது என்று ''நான்', விரும்புகின்றேன். குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி வாழும் அவலநிலையிலிருந்து மனிதன் விடுபட வேண்டும் போதைப் பொருட்களின் கைப்பாவையாய் வாழும் போதை நிலையிலிருந்து விடுதலையடைய வேண்டும். மது மனிதனைக் குடிக்கும் இழிநிலைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அப்பொழுது பலரது வாழ்க்கையில் வசந்தம் வீசும்.

— ஆசிரியர் —

MUSEUM * JAFFNA TEACHING HOSPITAL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நான்" கட்டுரைப்போட்டி இல 3

— தலைப்பு —

தனிமைத்துவத்தின் தனியான பண்புகள்

பரிசு: 15 ரூபா

முடிவுத் திகதி: 30 – 10 – 82

போட்டி விதிகள்

1 போட்டியில் எவரும் பங்குபற்றலாம்
2 கட்டுரை உளவியல் கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் 100 சொற்களுக்கு குறையாமலும் 1200 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்
3 கட்டுரைகளை அனுப்பும்போது "நான்" கட்டுரைப்போட்டி இல; 3 என தபாலுறையின் இடதுபக்கத்தில் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் எழுத்தாளர்கள் கவனத்திற்கு!

தயவுசெய்து இனி உங்கள் ஆக்கங்களை மட்டும் கீழே குறிப்பிடும் புதிய முகவரிக்கு அனுப்பிவையுங்கள்: ஏனைய தொடர்புகளுக்கு அம்பிட்டிய விலாசத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

"நான்"
புனிதவளனார் அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை – யாழ்ப்பாணம்

## குறுக்கெழுத்துப் போட்டி - 7

விடைகள் இடமிருந்து வலம்

(1) பாவிப்பு (6) ரகசியம் (11) திடம் (17) சமலம் (22) விம்மல்

மேலிருந்து கீழ்

(1) பாரதி (2) விகடகவி (4) புயல் (5) விம்பம் (8) சிம்மம்

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி

பி யேக்கப் யோகராஜ்
புனித ஆசையப்பர் குருமடம்
கொழும்புத்துறை – யாழ்ப்பாணம்

போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் சாய்ந்து போனால்

— புசல்லாவை S. இஸ்மாலிகா —

தடாரென்று சப்தத்துடன் கதவு ஓங்கி அறையப்பட்டதை உணர்ந்த நான் டி.வி, யை நிறுத்திவிட்டு வாசலைப் பார்க்கின்றேன். வழக்கமான தள்ளாட்டத்துடன் என் கணவன் பாபு உளறிக் கையாட்டியபடி வந்துக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் "ரவியும் ராஜியும் எங்கே என்று அவர் கத்தினார். பத்தரை மணியாகப் போகிறது ஒருவயதும் இரண்டு வயதுமான இந்தப் பிஞ்சுகள் ஆடிக் கொண்டு வரும் தந்தையைக் காண விழித்திருக்கவா போகிறதுகள் என்று நான் நினைத்து மௌனம் சாதிக்க என் கணவருக்கு இந்த மௌனமே கோபத்தைத் தர "மகாராணிக்கு வாயைத் திறந்தால் முத்து கொட்டிவிடுமோ,' என்று என்னை முறைத்துப் பார்க்கின்றார்.

அவரிடம் போராடிப் பயனில்லை என்று கொஞ்ச நாட்களாகவே நன்றாக உணர்ந்துவிட்ட நான் "சாப்பிட வாங்க" என்றபடி மேசையை நோக்கி நடக்கிறேன், என் அமைதி அவருக்கு மீண்டும் வெறுப்பைத் தர வெறி கொண்ட மிருகமாக என் மேல் பாய்கிறார். மேசை மீதிருந்த பாத்திரங்களை தரையில் எறிகிறார். சோறு தரையெங்கும் சிதறி என்னைப் பார்த்துச் சிரிக்கிறது. "உனக்கு வர வர ராங்கி கூடிப் போயிரிச்சி எல்லாம் சம்பாதிக்கிற திமிர் அழகு மட்டும் கொஞ்சம் இருந்திருந்தா இந்நேரம் இந்த குடிகாரனை விட்டுட்டு எவனோடையாவது ஓடிப் போயிருப்பே. அதுதான் கடவுளாப் பாத்து உன்னைக்குருபியா படைச்சிட்டான்." என்று வார்த்தைகளால் சாடுகையில், தாங்க இயலாத வேதனையில் 'சீ நீங்க மனிதனில்லை, மிருகம்" என்று குமுறி அழுகிறேன். என் ஆவேசத்தின் வீச்சு அவரின் கொதிப்பைக் கிளற என் கன்னத்தில் ஓங்கி அறைந்து "செத்துத் தொலை" என்று கூறி விட்டு அவரின் அறைக்குள் தள்ளாடிப் போய் படுக்கையில் விழுகிறார்.

கன்றிப் போன கன்னங்களில் சூடான கண்ணீர் விழுந்து எரிகையில் குடியில் அதுதரும் போதையில் விரும்பாமல் திருமணம் செய்து என் இதய உணர்வுகளையெல்லாம் குழிதோண்டிப் புதைத்து என் வாழ்க்கையை அணு அணுவாக எரிக்கின்றார் என்றே எனக்குப் படுகின்றது. பசி வயிற்றைக் கிள்ளிய போதும் சாப்பிட மனமேயில்லாதவளாய் கட்டிலில் சென்று சரிந்தபோது நான்கு வருடங்களாய் பெற்றோர் உற்றோர் அனைவரையும் மறந்து போய் துயரங்களைச் சொல்லி அழக்கூட நாதியற்று சிறை போன்ற ஒரு வாழ்க்கையில் நான் அடைபட்டுப்போனதை எண்ணுகையில் இந்த டீச்சர் வேலையையும் இவர் சொன்னது போல விட்டிருந்தால் என்னவாகியிருக்கும் என்று நினைக்கிறேன் நிச்சயம் பைத்தியம் பிடித்திருக்குமென்றே தோன்றுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் எவ்வளவு பெரிய சுயநலக்காரர்கள் என்று நினைக்கையில் எவ்வளவு பெரிய நம்பிக்கையில் பணம், அந்தஸ்து, அழகு இவைகளை அடிப்படையாக வைத்து பெண்ணை தானம் செய்து விடுகிறார்கள் என்று ஆச்சரியம் ஏற்படுகிறது எல்லாவற்றையும் அளவிடமுனையும் மனிதனால் மனதையும் குண அமைப்புக்களையும் அளவிடமுடிந்தால் எத்தனையோ பேருடைய வாழ்க்கை சுருதி பேதமில்லாமல் அமைந்திருக்கும், எத்தனை பேருடைய எதிர்பார்ப்புக்கள் நலமாக பூர்த்தியெய்திருக்கும் என்னைப்போல எத்தனை பேருடைய கண்ணீருக்கு இங்கே வேலையில்லாமல் போயிருக்கும், என்று என் மனம் கற்பனை செய்கிறது.

இவருடைய ஆர்ப்பாட்டங்களும், கள் வெறியும் தினம் பழகிப் போய்விட்ட ஒன்றாக எனக்கு ஆகிப் போயிருந்தாலும் கூட விரும்பாத வாழ்கை என்ற முத்திரையைத் தானே குத்திக்கொண்டு எந்த ஜென்மத்திலோ ஏற்பட்ட பகைமைக்குப்பழி வாங்குகின்றமாதிரி என்னை பணையமாக ஏற்ற தினம் கொத்திக்குதறுகின்ற அநியாய வாழ்க்கையில் குடி, சந்தேகம், தாழ்வுணர்ச்சி விரக்தி, கயமை என்று எல்லாவற்றிலும் தடம் புரண்டு போயிருக்கும். இவரோடு எந்த நியாயத்தைக் கருதி புல்லானாலும் புருஷன் என்று வாழ முடியும் என எண்ணுகிறேன் எனக்கு இன்று போல முன்பு நடந்த பல சம்பவங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன.

திருமணமான புதிது தனிக் குடித்தனம் நடத்த வேண்டும் என்று எனக்கு ஆசையை மூட்டி. அவருக்கு சாதகமாக என்னை பெற்றோரிடமிருந்து இழுத்து வந்த சமயம், முப்பது வயதுவரை உழைத்து உழைத்து சீதனத்தை மூட்டைக் கட்டிய களைப்பு தீர நான் சுதந்திர பெருமூச்சு விட்ட நேரம். வீட்டிற்கு அருகிலே உள்ள பாடசாலை ஒன்றிக்கு மாற்றம் கேட்டு தனிக்குடித்தனமும் வந்துவிட்ட. எனக்கு பாடசாலை விட்டு இரண்டெட்டில் வீடுவந்து குளித்துச் சாப்பிட்ட பின் அவர் 'பேங்கில்' இருந்து வந்து நண்பர்களுடன் சீட்டாடிவிட்டு வரும்வரை தனிமையில் இருப்பது கஷ்டமாக இருந்தது. எவ்வளவு நேரம்தான் புத்தகம் வாசிப்பது. ரேடியோ கேட்பது. சனி ஞாயிறிலும் அவர் அதிகமாக வெளியே தான் இருப்பார் எனக்குத் தான் குடிப்பது தெரியாமல் இருக்க வேண்டுமென்பதற்காக அவர் நண்பர்களுடனே நேரத்தைச் செலவிட்டது தெரியாத நிலையில் ஒருநாள் நான் ஆசையாகக் கேட்டேன்

"எனக்கு இப்படியே வீட்டில் இருப்பது போரடிக்கிறது. நாம் எங்கேயாவது வெளியில் போய் வருவோமா?" என்று கேட்டேன் புது மனைவி என்று கூட அவர் பார்க்கவில்லை. போதை அவர் பாதையை. மறிக்க நினைந்தவராய் கூறினார். "இதுக்கு முந்தி ஊர் சுற்றி பழகிட்ட போலயிருக்கு" ஆனா இனி அந்தப் பழக்கத்தை மறந்திடு இல்லேன்னா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை முறிச்சிடுவேன். எவனை பார்க்கணும்னு நெனைச்சி வெளியிலே போக நினைக்கிறே'' என்றார் அன்பாக. அவருடன் நான் கைகோர்த்துத் திரிய எண்ணிய தூய எண்ணத்தில் ஒரு நொடியில் அவர் சேற்றை வாரி வீசி விட்டதை எண்ணியபோது ஒன்றும் புரியாமல் அம்புபட்ட மானாக ஒருகணம் துடித்துவிட்டேன், பின் அவர் தள்ளாடியவிதமும் அவரது வாயிருந்து வீசிய மது நெடியும் ஓ.... இவர் ஒரு குடிகாரன் என்பதை புரியவைத்தது. நானும், என் பெற்றோரும் முப்பது வயது வரை உண்ணாமல் உடுக்காமல் ஆசைகளையெல்லாம் மறந்து நாயாக அலைந்து சேர்த்த சீதனக்காசும், என் இளமையும் அழகும் உணர்வுகளும் சுகமும் எல்லாமே, ஒரு பேங்க் மாப்பிள்ளை என்ற லேபலின் மூலம் ஏமாற்றப்பட்டு விட்டதை எண்ணி மனம் குழப்பினேன். அடியும் ஏச்சும் அன்றே அறிமுகமாயின.

எனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை இதுதான் என்று மனதை கல்லாக்கிக் கொண்டு பழிப்புக் கிடமாகி விடக் கூடாதே என்று தன்னை கண்போல் வளர்த்த பெற்ற வர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் எல்லோரையுமே நானே ஒதுக்கிவைத்து வீட்டு பாடசாலையும் வீடு மென்று கூண்டு வாழ்க்கை யொன்றை சிருஸ்டித்துக் கொண்டு அவருக்குச் சரியாக நான் மாற முயன்று மாற்ற முயன்று நான் பட்ட அடிகளும் அதனால் மனதில் ஏற்பட்ட வலிகளும் வடுக்களும் கொஞ்சமா என்ன?

நான் சுயமாக சம்பாதிக்கின்றேன் என்பதற்காக என்னை சந்தேகித்து, எந்த ஆணோடாவது பேசிவிட்டால் வார்த்தைகளால் குத்திக் கிழித்து, நான் அழகில்லாதவள் என்பதர்க்காக நண்பர்கள் முன் ஒதுக்கி, ஒரு வேலைக்காரியை போல நடத்தி, அவருக்கு தேவைப்பட்ட போது கள்ள சாகசத்துடன் தன் ஆசையை தீர்த்து. ஒரு நரியின் கள்ளமும் ஓனாயின் வெறியும் கொண்ட அவரிடம் கல்லறைப் பூக்களாக நான் வாழ்வது எவ்வளவு கொடுமை.

ஒருநாள் இரவு, ஒரு முடிவுக்கு வந்தவள் போல் நான் அவரிடம் மன்றாடிக் கேட்டேன். ''தயவு செய்து இந்தப் பாழும் குடியை விட்டு விடுங்கள் இந்தக் குழந்தைகளுக்காவது நீங்கள் திருந்தத்தான் வேண்டும் எம் சுயநலத்தால் இந்தப் பிஞ்சுகள் பாதை தவறி விட்டால் வளர வேண்டியபயிர் நோய் பட்டால் யாருக்கு லாபம் சொல்லுங்கள்? கை நிறைய சம்பளம். அமைதியான குடும்பம் இன்னும் என்ன வேண்டு மென்று இப்படி உங்களையே அழித்துக் கொள்கிறீர்கள்'' என்று நான் கேட்டபோது அவர் இந்த உலகத்தின் சுயநலத்தை யெல்லாம் ஒன்று திரட்டி வைத்திருப்பவர் போல குரூரத்துடன் கூறினார்.

''என்னாலே உன் குழந்தைகள் கெட்டுப் போயிரும்னு நீ நினைத்தால் என்னை விட்டு நீ தாராளமாகப் போகலாம் நான் விரும்பாத வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் வாரி எப்படி வளர்ந்தால் எனக் கென்ன? மல்லிகா ஒன்று தெரிந்துகொள். இன்று உனக்கு என் மனதை திறந்து கூறுகிறேன் உண்மையிலேயே நான் உன்னை விரும்பவில்லை. என் அப்பா என் வாழ்க்கையை பழியெடுத்த கோபத்தை உன்மூலம் நான் தீர்த்துக் கொள்கிறேன் வாழ்க்கையை எனக்கு ஒரு தண்டனையாகிப் போய்விட்டது என்று அவர் பற்களை நெறித்த போது நான் உலகமே என் தலைமேல் விழுந்துவிட்டது போல அதிர்ச்சியடைந்தேன். "எனது கடந்தகால கசப்பான வாழ்க்கை உனக்கும் தெரிய வேண்டும்" என்று அவர் தொடர்ந்து கூறினார் "சிறு வயதில் தாயின் முகம் என்னவென்றே தெரியாத நிலையில் ஹொஸ்டல் வாழ்க்கையில் நுழைந்த நான் தினம் தினம் உப்புச் சப்பில்லாத சாப்பாட்டையும் புத்தகங்களையும் கண்டிப்புகளையுமே அனுபவித்தேன், விடுமுறையில் ஆசையோடு வீட்டிற்கு ஓடி வருவேன் எந்த அன்பைத்தேடி ஓடிவருவேனோ அந்த அன்புக்குப்பதில் எனக்குக் கிடைத்த தென்னவோ வெறும் கண்டிப்பும் ஒட்டாத தந்தையுமே.

ஹொஸ்டல் வாழ்க்கையை விட மோசமான ஒரு சூழ்நிலையே எனக்கு வீட்டில் அமைந்தது, என் அப்பாவுக்கு ஒரு தேயிலைத் தோட்டமே சொந்தமாக இருந்தது அதில் அவருக்கு தலை வணங்கும் தொழிலாளர்களை எப்படி நடத்தினாரோ அதே ரீதியில் சாப்பிட்டாயா? படித்தாயா? அங்கே போகாதே, இவருடன் பேசாதே என்ற ரீதியிலேயே வளர்த்தார். தலைவலி என்றால் கூட வேலைக்கார தம்பு தான் தைலம் தேய்ப்பான். மகனிடம் அதிக அன்பு காட்டினால் எங்கே மகன் தன்னை மதியாமல் போய்விடுவானோ என்ற தாழ்வு மனப்பான்மையும் போலி கௌரவமும் அவருக்கிருந்தது. இந்தக் கௌரவ வெறியில் ஒரு பிஞ்சு மனம் சுக்கு நூறாகிப் போவதை அவர் உணரவேயில்லை. எத்தனையோ இரவுகள் என் அம்மாவை எண்ணி ஊமை அழுகையாக மனதுக்குள் அழுது துடித்திருக்கிறேன். ஒரு அன்னையின இடத்தை ஒரு தந்தையால் நிச்சயம் நிறைவு செய்ய இயலாது என்ற கசப்பான உண்மையை நான் தெரிந்துகொள்ள ஆரம்பித்தேன்.

காலம் சென்ற போது எனக்கொரு அப்பா இருக்கிறார் என்ற பிரக்ஞையே எனக்கு இல்லாமல் போனது. அவரையும் அவரது பணத்தையும் எல்லாவற்றையுமே நான் வெறுத்தேன். ஒரு தந்தையைப் போல் எனக்குள்ளே அடங்கியபடி என் உணர்வுகளையும் அடக்கக் கற்றுக்கொண்டேன்.

அப்போதுதான் என் வரண்ட வாழ்க்கையில் ஒரு ஒளி உண்டானது போல ஒரு மாற்றம் வந்தது. ஒரு பெண்ணை காதலிக்கும் இனிமையான சந்தர்ப்பம் எனக்கும் வந்தது. எங்கள் கல்லூரிக்குப் பக்கத்திலே அமைந்திருந்த இலங்கையில் புகழ் பெற்ற பெண்கள் கல்லூரி ஒன்றிலே படித்துக் கொண்டிருந்த ரூபாவை லைப்ரரி ஒன்றில் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. சாதாரணமாக புத்தகங்களைப்பற்றி விமர்சனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதில் தொடர்ந்த இந்த நட்பு பின்பு காதலாக மாறியது ரூபா சாதாரணமான ஒரு நடுத்தர குடும்பத்தின் மூத்த மகள். அழகும் இனிமையும் கொண்டவள் என்மேல் உயிரையே வைத்திருந்த அவளது உண்மையான அன்பு அவளே உலகம் என்று என்னை ஆக்கியது. எனது பாலைவனத்து வாழ்க்கையில் அவள் பசுஞ்சோலையானுள்.

நான் ரூபாவையே திருமணம் செய்யப்போவதாகப் பிடிவாதமாக அப்பாவிடம் கூறினேன். அவரது ஆர்ப்பாட்டங்களுக்கு நான் அசையவேயில்லை. அப்போதுதான் திடீரென்று ரூபாவிடமிருந்து அவளது திருமண அழைப்பிதழ் வந்தது. அதிர்ச்சியிலிருந்து விடுபட முடியாமல் நின்றபோது எனக்கு ஒரு உண்மை விரைவில் தெரிய வந்தது. அது என்மூலம் சாதிக்க இயலாததை ரூபாவின் அப்பா மூலமே என் தந்தை சாதித்துக் கொண்டார் என்பது. சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ரூபாவின் தந்தை என் அப்பாவின் அந்தஸ்தையும், எதிர்ப்பையும், மிரட்டலையும் கண்டு பயந்து விட்டார். இந்த சிக்கலுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமென்று எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்தபோது என் தந்தையின் உபதேசப்படியே அவளுக்குத் திருமணம் செய்து வைத்ததன் மூலம் இப்பிரச்சனைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தார்.

ரூபாவுக்கு திருமணமானதும் என் அப்பா என்னை ஏளனமாகப் பார்த்தார், அவரை கொல்ல வேண்டும் போல் ஆவேசம் என் நெஞ்சை சில சமயம் தூண்டும். என்னை நானே அழித்துக் கொள்ளவும் பல சமயம் மனம் விழையும். இந்த போராட்டத்தில் இருந்து விடுதலை பெறவே நான் குடிக்கவாரம்பித்தேன், ஆனல் என் வாழ்க்கையை எத்தனையோ வகையில் திசை திருப்பிய என் தந்தையால் என் குடியைமாத்திரம் மாற்றவே இயலவில்லை, இறுதியில் உன் மூலமாவது என்னை மாற்றலாம் என்ற நப்பாசையில் திருமண வாழ்க்கையை அடியோடு வெறுத்த எனக்கு உன்னை திருமணம் செய்து வைத்தார் சுய கௌரவமும், சுய திருப்தியும் அதிகம் கொண்ட உன் மாமனருக்கு தன் விருப்பம் போல நிறைய சீதனத்துடன் பெண் எடுத்ததில் மிகப் பெரிய திருப்தி. ஆனல் காலமெல்லாம் என் அப்பாவால் மட்டந்தட்டப்பட்டு மூழியாகிவிட்ட என் உணர்வுகளுக்கு சொத்து, சுகம், மனைவி எதுதான் திருப்தி தந்துவிட முடியும் சொல்" அவர் விரக்தி தோய்ந்த சிரிப்புடன் கேட்ட போது நான் துடித்தேன், மனதுள் கண்ணீர் வடித்தேன்.

அவர் தொடர்ந்து கதை போல தன் வாழ்க்கையைக் கூறத் தொடங்கினர், அவர் மனக் கதவை இன்று நன்ருகவே திறந்து விட்டிருப்பதை உணர்ந்தேன். "எனக்குப் பிடிக்காத நான் விரும்பாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ படும் வேதனைகளே அவரை சுட்டெரிக்கட்டும். எனக்கும் அவருக்கும் இடையில் சம்பந்தமே இல்லாத நீ பகடைக்காயாக நிற்கிறாயே! அதை நினைக்கத்தான் எனக்கு சிரிப்பாக இருக்கிறது மனம் சாய்ந்து போன என் வாழ்க்கையை சரிசெய்ய முனைந்தால் அதில் நிச்சயம் உனக்குத் தோல்விதான் கிடைக்கும் அதனால் என்னால் உனக்கோ உன் குழந்தைகளுக்கோ கஷ்டம் ஏற்படும் என்று நினைத்தால் நீ தாராளமாக என்னை விட்டுப் பிரியலாம். வாழ்க்கை எனக்கொரு சுமை. இதில் பந்தம் என்ன சொந்தமென்ன?'' என்று அவர் தத்துவம் பேசி முடித்த போது. அவரது மனப்பாரமெல்லாம் என் நெஞ்சில் ஏறியிருப்பதை உணர்ந்தேன்.

கதைகளில் வாழ்க்கை இருக்கிறது என்பார்கள். ஆனால் என் வாழ்க்கையே ஒரு கதையாகி விட்டதை எண்ணுகையில் சிரிக்க வேண்டும் போல இருந்தது உண்மைகள் கசப்பாக இருந்தாலும் விழுங்கித்தானே தீர வேண்டும்! உடம்பால் நோய்பட்டவர்களை இந்த சமூகத்தால் உணர்ந்து கொண்டு அவர்களுக்கு சிகிச்சை செய்து குணமாக்குவது போல மனதால் நோய்பட்டு கோடானு கோடி பேர் வெளியில் மனிதர்களாகத் திரிகின்றார்களே அவர்களுக்கு இந்த சமூகம் இனங்கண்டு சிகிச்சை செய்ய வழி வகுத்தால் என்ன என்று யோசித்தேன்.

எப்படி பட்டவராக இருந்தாலும் அவர் என் கணவர், தாலி திருமணத்தை புனிதமாகக் கருதும் மண்ணின் மகள் 'என்ற உணர்வில் அவரோடு வாழ்ந்தே தீருவது என்று முடிவு செய்து வாழ்ந்தபோது ஒரு வருடம் "சர்கஸ்" விளையாட்டாகவே என் வாழ்க்கை சென்றிருக்கின்றது. தினம் தினம் கசப்பு நிறைந்த அனுபவங்களினால் வாழ்க்கை வெறும் கசப்பு நிறைந்த கற்பனைகள் அல்ல என்று புரிகிறது போலி கௌரவத்தை மனதில் சுமந்து இதற்கொரு விடையே நான் தேடாமல் விட்டால் நானோ தேய்ந்து வரும் இந்த வாழ்க்கைச் சக்கரத்தில் நானும் என் குழந்தைகளும் நிச்சயம் கவிழ்ந்து போவோம் எனப்படுகிறது இவர் மாறப் போவதில்லை இவரால் என் மன நிலை மாறும் சுகமறியாத சுமைதாங்கியாவேன். குடிகார பொறுப்பற்ற தந்தை, சதா துயரப்படும் அன்னை, இவர்களால் இளம் பிஞ்சுகள் தி செய்வதறியாத தவித்து கவலைப் பட்டு வருந்தி விரக்தியும் தோல்வியும் சேர நானோ இவரும் விரக்தியுற்ற வனாகி தந்தை வெறுத்து தாயை வெறுத்து மனைவியை வதைத்து இறைவா இந்த தொடருக்கு ஒரு முற்றுப் புள்ளி இடவேண்டும் என் குழந்தைகளின் மனம் சாய்ந்து போகக் கூடாது இந்த சமுகத்திற்கு, குடும்பங்களுக்கு சுகமான மனிதன் தேவை நோயாளி தேவையில்லை,

அவர் அடித்த அடி கன்னத்தில் விர் விர் ரென்று வலிக்க, பசி வயிற்றைக் கிள்ள. நடு இரவின் ஏகாந்தத்தில் ஒரு முடிவை என் குழந்தைகளுக்காக ஒரு முடிவை தேடுகிறேன், இவ்வளவு நாட்களும் நம்பிக்கையால் நின்ற என் கனவுகள் அவநம்பிக்கையின் விளிம்பைத் தொட அவரை விட்டு இனி நிறந்தரமாகப் பிரிந்துவிட நான் முடிவு எடுத்துவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்குவியல் - 22

# நம் நாட்டைப் பொறுத்தவரை மதுவிலக்கைச் சட்டரீதியாக அங்கீகரிப்பது அவசியமற்றது

மக்களை மனிதர்களாக வாழவிடாது அவர்களை மாக்களாக மாற்றி அமைக்கும் சாதனங்கள் இன்றைய உலகில் ஏராளம் இச்சாதனங்களிலே முன்னணி வகிப்பதுதான் மது. மனிதனுக்குப் போதை என்ற ஒரு புதிய உணர்வைக்கொடுத்து அவனது பகுத்தறிவைத் திரையிட்டு மறைத்து பயங்கரமும் பரிதாபமும் நிறைந்த செயல்களுக்கு அவனை இட்டுச் செல்வதிலே எதுவுமே இதற்கு ஈடுஇணையாகாது.

ஆகவே மனிதன் மதுவை அருந்துவது அவசியம் என்று அடித்துக் கூறுவது எனது நோக்கம் அல்ல, மாறாக எமது நாட்டில் மதுவிலக்கைச் சட்ட ரீதியாக அமுல் படுத்துவதன் மூலம் மக்கள் மதுவை அருந்துவதைத் தடை செய்யும் முயற்சி வெற்றியளிக்காது, என்பதை நிரூபித்துக் காட்டுவதே எனது நோக்கம் ஆகும்,

நாகரீகத்தில் ஓங்கி வளர்ந்துள்ள இன்றைய சமுதாயத்திலே சட்டங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளதை நாம் மறுத்துவிட முடியாது மனித வாழ்வை நெறிப்படுத்த உருவாக்கப்பட்ட சட்டங்கள் அவை தாம் உருவாக்கப்பட்ட நோக்கத்தை எவ்வளவு தூரம் நிறைவு செய்கின்றன என்பது கேள்விக்குறியே. இன்று எமது நாட்டைப் பிறநாடுகளுடன் நாம் ஒப்பிட்டு நோக்கும் போது குற்றச் செயல்களிலே எமது நாடு முன்னணி வகிப்பதை சமீப காலத்துப் புள்ளி விபரங்கள் புலப்படுத்துகின்றன குற்றச் செயல்களைத் தடுக்கக் கொண்டு வரப்படும் சட்டங்கள் குற்றச் செயல்களைப் புரிந்தவர்களைத் தண்டிக்க உதவுகின்றனவே யொழிய குற்றச்செயல்களை முற்றாக ஒழிப்பதில் அவை வெற்றியைக் கொடுக்கவில்லை என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆகவே மது அருந்துவதைச் சட்டரீதியாகத் தடை செய்வதின் மூலம் மது அருந்தும் பழக்கத்தை முற்றாக ஒழித்துவிட முடியுமா? இல்லவே இல்லை. மது விலக்கைச் சட்ட ரீதியாக அங்கீகரிப்பதன் மூலம் மதுவிற்பனை சட்ட பூர்வமாகத் தடை செய்யப்படும் ஆனால் கள்ளமாக மதுபானங்களைத் தயாரிக்கும் நடவடிக்கை அதிகரிக்கும், இதனால் ஆட்சியாளருக்குப் பிரச்சினை மேலும் அதிகமாகும் இவ்வளவு கள்ளமாக மதுவைத் தயாரிப்பவர்களும் அதனை அருந்துபவர்களும் தாம் சட்ட விரோதமான செயல் ஒன்றைப் புரிவதை உணர்வதனால் அவர்கள் உள்ளத்தில் எப்பொழுதும் ஒருகுற்ற உணர்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் எவ்வேளையிலும் காவலர்களிடம் அகப்பட்டுவிடலாம் என்ற பயமும் நிலவுவதால் அவர்களது ஆளுமை பாதிக்கப்பட அவர்களது வாழ்வு மேலும் மோசமாகிவிடும்.

மதுவுக்கு அடிமையாகிவிட்டவர்கள் மது பானங்கள் தங்களுக்குக் கிடைக்காத பட்சத்திலே கிடைக்கக்கூடிய வேறு இரசாயன பதார்த்தங்களைக் கொண்டு மதுபானம் தயாரிக்கும் முயற்சியில் இறங்குவார்கள் முக்கியமாக (Sprit of wine) என அழைக்கப்படும், மதுசாரத்துடன் வேறுசில பதார்த்தங்களையும் சேர்த்து அருந்தும் பொழுது அதிலே யுள்ள நச்சுத்தன்மை முற்றாக நீங்கிவிட்டாததால் அதனை அருந்துப வர்களின் உயிருக்கே அது ஆபத்தை ஏற்படுத்தி விடுகின்றது இவ்வாறான சம்பவங்கள் எமது நாட்டிலும் அயல் நாடான இந்தியா விலும் கடந்த காலங்களில் பல தடவைகள் நிகழ்ந்து பல உயிர்களைப் பலியாக்கியுள்ளதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்வது அவசியம். எனவே மதுவிலக்கு சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்படுமானல். இந்நிலை நிச்சயமாக ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே மதுவிலக்கைச் சட்ட ரீதியாக அமுல் நடத்துவதன் மூலம் அடைய வேண்டிய நோக்கத்தை நாம் அடைந்துவிட முடியாது என்பது உறுதி. எமது நோக்கம் மக்கள் மது அருந்தும் பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்பதே. ஆனால் மதுவிலக்கைச் சட்ட ரீதியாகச் செயற்படுத்துவதனுல் மது அருந்தும் பழக்கம் ஒழிவதற்குப் பதிலாக மறைவாக மது அருந்தும் பழக்கம் நிச்சயமாக ஊக்குவிக்கப்படும் எனவே குடிப்பழக்கம் தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கும்,

எல்லோரும் ஒரே காரணத்திற்காக மதுவை அருந்துவதில்லை பலர் பல காரணங்களுக்காக மதுவை அருந்துகிறார்கள். சிலர் பொழுதைப்போக்குவதற்காக மதுவை அருந்துகின்றனர், சிலர் கவலைகளைச் சில மணித்துளிகளாவது மறந்து வாழ மதுவை அருந்துகின்றனர்' இன்னும் சிலர் வாழ்க்கையிலே விரக்தியுற்று மதுவிடம் தஞ்சம் புகுகின்றனர், வேறு சிலர் உழைப்பின் களைப்பைப் போக்கி உற்சாகம் பெற மதுவை அருந்துகின்றனர் இவ்வாறு பலவேறு காரணங்களின் நிமித்தம் மதுவைத்பருக ஆரம்பித்தவர்களில் பலர் காலப்போக்கிலே அதில் நின்றும் விடுபட முடியாதவாறு அதற்கு அடிமை ஆகிவிடுகின்றனர்'

மதுவிலக்கு சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்படும்போது மது அருந்துபவர்களை அரசு கைது செய்து அவர்களுக்குத் தண்டனை வழங்கும் அவர்கள் மது அருந்தும் பழக்கத்திற்கு எவ்வாறு ஆளாகிறார்கள் என்பதை நன்கு ஆராயாது அவர்களுக்குத் தண்டனை வழங்குவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமாகிவிடாது. மது அருந்தும் பிரச்சினையைச் சட்டங்களைக் கொண்டு அரசு தீர்க்க முயன்றால் மேற்கூறியவாறு மோசமான பல விளைவுகளைத் தான் எதிர் நோக்க வேண்டியிருக்கும்,

மது அருந்தும் பழக்கம் ஒரு உளநோய். மது அருந்துபவர்களில் உள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள். எனவே நாமும் இப்பிரச்சனை ஒரு உளவியல் பிரச்சினை என்பதனை ஏற்று உளவியல் ரீதியாகவே இதற்குத் தீர்வு காண முயல வேண்டும் மது அருந்தும் பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டவரை அழைத்து அவர் அப் பழக்கத்திற்கு அடிமையாவதற்குக் காரணமாய் அமைந்தவற்றை அறிந்து அவருக்கு உளசிகிச்சை அளிப்பதன் மூலமே அவரை அப் பழக்கத்திலிருந்து நாம் மீட்கலாம். இதற்கு வேண்டிய ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது. முக்கியமாகப் பின் வரும் சில வழிகளைக் குறிப்பிடலாம் வைத்தியசாலைகளிலே மதுவுக்கு அடிமையானவர்களுக்கு உளச்சிகிச்சை அளிக்கும் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்கென புதிய மருத்துவ நிலையங்கள் தாபிக்கப்பட வேண்டும் இதற்கென கைதேர்ந்த உளவியல் நிபுணர்கள் பெறப்பட்டு எமது நாட்டிலும் இத்துறையில் நன்கு பயிற்சியளிக்கப்பட வேண்டும். மது மனிதனுக்கு உகந்ததல்ல என்ற உண்மையை மக்களுக்கு உணர்த்த வேண்டும் பாடசாலைகளிலே சிறு பருவத்திலிருந்தே மதுவின் தீயவிளைவுகளைப்பற்றி மாணவர்க்குப் போதித்து வரவேண்டும். மதுவின் தீமைகளை மக்கள் தாமாக உணர்ந்து அவர்கள் அதன் பிடியினின்றும் விடுபட உதவும் விசேட இயக்கங்களை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

இவ்விதமாகத்தான் மது அருந்தும் பிரச்சினைக்கு நாம் தீர்வு காண வேண்டுமேயொழிய மதுவிலக்கைச் சட்ட பூர்வமாக அங்கீகரிப்பதனால் அல்ல. எனவே நம் நாட்டைப் பொறுத்தவரையில் மதுவிலக்கைச் சட்ட பூர்வமாக அங்கீகரிப்பது அவசியமற்ற ஒரு நடவடிக்கையே.

ச. எட்மன்ட் றெஜிறேல்ட்
மாரீசன் கூடல்

## கருத்துக்குவியல் - 23

சமுதாயம் தலைவர்களை உருவாக்குகின்றதா அன்றேல்
தலைவர்கள் சமுதாயத்தை உருவாக்குகின்றார்களா?

**உங்கள் கருத்துக்களை ஐப்பசி 25 ம் திகதிக்கு முன் அஞ்சல் செய்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் நாட்டைப் பொறுத்தவரை மதுவிலக்கைச் சட்டரீதியாக அங்கீகரிப்பது அவசியமானது



எமது நாடு பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் ஓர் வறிய நாடுளில் ஒன்றாகும் இந் நாட்டின் பொருளாதாரம் வளர்க்கப்பட வேண்டியதொன்றாகும் இவ்வாறு பொருளாதாரம் வளர்வதற்கு மது விலக்கானது சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டால் பெரிதும் உதவியாயிருக்கும். பொருளாதார வளர்ச்சி வீதம் இப்போதிருப்பதைவிட அதிகரிக்கும். இதற்குரிய காரணத்தை எடுத்து நோக்குவோமாயின் தற்போது நாட்டில் நடைமுறையில் இருக்கும் மதுவிலக்கற்ற நிலை தொடர்ந்து நிலவுவதால் அளவுக்கதிகமாக குடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இவ்வாறு அதிகமாக குடிப்பதனால் குடிப்பவருக்கு மயக்கம் வருகிறது. மதி குறைகிறது. அதன் விளைவாக சமூக விரோத செயல்கள் மலிகின்றன அடித்தல் திட்டுதல் கொலை, கொள்ளை, கற்பழிப்பு கலகம் விளைவித்தல் போன்ற, மனிதாபிமானமற்ற செயல்கள் கூடுகின்றன சிலர் மது பருகிய பின் சுயநினைவற்ற நிலையில் இவற்றை புரிகிறார்கள் வேறு சிலர் இவ்விரோத செயல்களை புரிவதற்க வே திட்டமிட்டு பருகிறார்கள்' இந்நிலையில் சிலர் அரச பொதுவுடைமைகளையும் அழிக்கிறார்கள். இவ்வாறான சட்டவிரோத சமூகவிரோத செயல்களினால் பல அழிவுகளும், செலவுகளும், துன்பங்களும், உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. இதனால் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி குன்றி வருகின்றது. எனவே, நம் நாட்டில் மது விலக்கை சட்ட ரீதியாக அங்கீகரித்து அமுல் படுத்துவதன் மூலம் திட்டமிட்டும் அளவுக்கதிகமாகவும் குடித்துவிட்டு கும்மாளமடிப்பதனால் ஏற்படும் சமூக விரோத செயல்களின் வளர்ச்சியினை அதிகளவும், பொருளாதார வீழ்ச்சியினை ஓரளவும் குறைக்கலாம். எனினும் ஒரு சிலர் கூறலாம் மது விற்பனைமூலம் அரசுக்கு குறிப்பிடக்கூடியளவிற்கு வருமானம் கிடைக்கிறது எனவும் சிலர் வேலை வாய்ப்பினை (மதுபான விற்பனையாளர்) பெற்றுள்ளார்கள் எனக்கூறலாம். ஆனு அவ்வாறு பெறும் வருமானத்தினை விட அதனால் ஏற்படும் விளைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு ஏற்படும் செலவு அரசுக்கு அதிகமாகிவிடுகிறது. எனவே இதை விட மது விலக்கை அமுல் படுத்தி மக்கள் மதுவிற்கு செலவிடும் பணத்தை அவர் தமது சொத்தாக வங்கிகளில் சேமிக்க பல வழிகளில் ஊக்கமளிக்கவும். அதன் மூலம் வங்கி பல கடன்களை வழங்கி பல பொது திட்டங்களை உருவாக்கலாம்.

மேலும் மது விலக்கற்ற நிலையில் தற்போதுள்ளவாறு மதுவருந்தும் வர்க்கத்தில் புதியவர்கள் சேரவழிவகுக்கிறது. குறிப்பாக இளைஞர்களும், சில கிழவர்களும் (12 - 17 வயதினர்) இவ்வர்க்கத்தில் சேர எத்தனிக்கிறார்கள். பொதுவாக இளைஞர்கள் சிறுவர்கள் மனதில் பல ஆசைகள் என்பது இயற்கை. ஆனால் அவற்றில் எல்லாவற்றையும் நிறைவேற்ற முடிவதில்லை எனினும் சந்தர்ப்பம் கிடைக்கையில் சிலவற்றை பயன்படுத்தி விடுவார்கள். அதாவது மது விலக்கின்றி பகிரங்கமாக விற்பனை செய்கையில் அதை அருந்த முயற்சிப்பார்கள் ஆனால் அதை கட்டுப்படுத்தி மது விலக்கை ஏற்படுத்தினால் அவர்கள் அதிக நாட்டம் செலுத்தமாட்டார்கள். உதாரணமாக ஆண்கள் 21 வயதிற்கு பின் தாம் திருமணம் செய்து கொள்ளலாம் என்பதால் சிலர் தாம் விரும்பும் திருமணங்களை (பெண்கள் பெற்றோர் எதிர்ப்பதனால்) நிறைவேற்ற 21 வயதிற்கு முன் விரும்பினாலும் சட்டத்திற்கு பயந்து 21 வயது வரை காத்திருக்கிறார்கள். அதே போன்று மது விலக்கை சட்டரீதியாக அங்கீகரிப்பதனால் இளைஞரை, சிறுவரை அதில் மனதை செலுத்துவதை தவிர்ப்பதுடன் அதனால் அவர்களுக்குப் பிற்காலத்தில் ஏற்படும் நோய்களில் நின்றும் காத்துக் கொள்ளலாம்.

மேலும் நீதித்துறையை நோக்குகையில மதுவின் மூலமே பல் உண்மைகள் மறைக்கப்படுகின்றன, சிலர் சட்டத்திற்கு விரோதமான குற்றங்களை புரிந்து விட்டு அக்குற்றச்சாட்டுகளை விசாரிக்க வரும் விசாரணையாளர்களுக்கு லஞ்சம் மது விருந்து என்பவற்றை கொடுத்து அவர்களை தம்வசப்படுத்தி குற்றச்சாட்டிலிருந்து தப்ப எத்தனிக்கிறார்கள். வேறு சிலர் தேர்தல்கள் போன்ற நேரங்களில் ஜனநாயகத்துக்கு விரோதமாக மதுவை வாக்காளர்களுக்குக் கொடுத்து மக்களின் மனச்சாட்சியினால் பெறவேண்டிய வாக்குகளை மதுவினால் பெற முயற்சிக்கிறார்கள். எனவே இவ்வாறான சட்டவிரோத, நீதிவிரோத செயல்கள் அசம்பாவிதங்கள் தலை தூக்காமல் இருக்க மதுவே மக்களிடம் இருந்து நீக்க வேண்டும். எனவே நம் நாட்டைப்பொறுத்தவரை மது விலக்கு சட்டரீதியாக அங்கீகரிக்கப்படுவது அவசியமாகின்றது.

அ. லொ. பிரான்சிஸ்
பலாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிப்பழக்கம் - றெஜி

"குடிக்காதே தம்பி குடிக்காதே — நீ
குடிச்சுக்கிட்டு குடலுகெட்டுத் துடிக்காதே"

என்பது திரையுலகக் கவிஞன் ஒருவனின் சிந்திக்க வைக்கும் வார்த்தைகள், தாங்கள் குடிப்பதைவிடுத்து குடி தங்களைக் குடிக்கச் செய்து, சமூகப்பண்புகள் தவறி மனிதர் மாக்களாக மாறி வருவது நாம் அறிந்த உண்மை குடிபோதையிலே சோர்க்கம் காண முயலுபவர்கள், வாழ்வு தவறி வழி கெட்டு அல்லல் உற்று அவதிப்படுவது ஏன் ..?

இன்றைய உலகிலே எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் குடிப்பழக்கத்திலே புரண்டு வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டுவருவது நாமறிந்த உண்மை. அண்மையிலே அமெரிக்காவிலே நடந்த கணக்கெடுப்பின் படி ஒவ்வொரு மூன்று தற்கொலைகளிலும் ஒன்று குடிப்பழக்கத்தால் ஏற்படுவதாகும். பெரும் பாலும் பாதைகளில் ஏற்படும் 28000 மரண விபத்துக்கள் குடிப்பழக்கம் கொண்ட சாரதிகளால் ஏற்படுபவை நடைபாதைகளில் செல்லுவோரில் கொல்லப்படும் 40 வீதமானோர் குடிப்பழக்கம் கொண்டோராவர். அமெரிக்கக் குற்றவாளிகளிலே அரைவாசிக்கு மேற்பட்டோர் குடிப்பழக்கம் கொண்டோர். ஐந்துக்கு ஒரு விவாகரத்துக்குக் காரணம் குடிப்பழக்கமே.

இது அமெரிக்க நிலை இதுபோன்று முழு உலகமுமே குடிப்பழக்கம் கொண்டோரால் அழிவுபபாதையிலே சென்று கொண்டிருக்கும் இவ்வேளையிலே குடிப்பழக்கத்தைப்பற்றிச் சற்று அறிந்து அப்போர்ப்பட்டவர்க்கு உதவமுன்வருவது எம் அனைவரதும் கடமைகும்.

குடிப்பழக்கம் ஒரு வியாதியாகும்

1950 ஆண்டு அமெரிக்க மருத்துவ ஒன்றியம், குடிப்பழக்கம் ஒரு வியாதி என்ற கருத்தை உலகிற்கு அறிவிக்கலாயிற்று. இக்கருத்தை இன்று எல்லா மருத்துவ நிபுர்ணகளுமே ஏற்றுக் கொள்கின்றனர் இது ஒரு சாதாரண வியாதியல்ல தொற்று வியாதி ஆகும் இன்று அகில உலகிலுமே எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் இப்பேர்ப்பட்ட நோயினலே பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றனர்.

குடிப்பழக்கம் கொண்ட ஒருவனின் வாழ்க்கையிலே மதுபானம் ஒரு மயக்க மருந்த க அமைந்து, அவனை அறியாமலேயே அது அவனுக்கொரு மேலான வாழ்க்கையை வழங்குவது போல் அமைந்துவிடுகின்றது இந்த மயக்கமான நிலை அவனைத் தொடர்ந்தும் குடிக்கச் செய்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப் போக்கில் அவனது உடல்வழக்கோடு இரண்டறக் கலந்து விடுகிறது. இப்பேர்ப்பட்ட நிலைக்குள்ளாயிருக்கும் ஒருவன் மதுவைத் தொட்டதும் தன்னை அறியாமலேயே அதற்கு அடிமையாகின்றான். இந்நிலை நாளடைவிலே முதிர்ச்சியடைந்து அவனது உடல் நலத்தைப் பாதிப்பதோடு சமூக உறவுகளைக் கட்டுப்படுத்தி தனது மது உலகினுள்ளே தனிமையாக அவன் வாழ வழி காட்டுகின்றது.

இப்பேர்ப்பட்ட நிலைக்கு ஒருவன் அதாவது குடிப்பழக்கம் கொண்டவன் உருவாக்கப்பட்டிருக்கும் போது மதுவைத் தொடுதல் எப்பொழுதுமே ஆபத்தாக அமைகின்றது. இந்நிலையிலிருந்து ஒருவன் விடுபட வேண்டுமேயாகில் மதுவைத்தொடுவதையே தடுக்கும் ஒரு தைரிய மனப்பான்மையும் திறமையும் தன்னுள்ளே வளர்க்க முயற்சித்தல் முதன்மையானதாகும்.

மதுப்பழக்கமும் உடல் நிலைச்சார்பும்

பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தைச்சார்ந்த பேராசிரியர் ஜோன் நிக்கொலஸ் தாம் நடாத்திய ஆராய்ச்சியின் பயனைக் கூறுகின்றார் "குடிப்பழக்கம் பரம்பரை வழிமுறை என்பதை முற்றாகக் கூற முடியாத போதிலும் நம் பரம்பரையினரிடமிருந்து பெறப்பட்ட நம் உடல் அமைப்பு முறையும் இப்பழக்கத்திற்கு வழி வகுக்கின்றன"

பிட்ஸ்பேர்க் காணிமெலன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த வைத்தியர் டென்னிஸ் டே டொரக் என்பவரும் இதே கருத்தையே தனது ஆராய்ச்சியின் பயனாக வெளியிடுகின்றார்.

இதிலிருந்து நாம் நம் பெற்றோர்கள் குடிப்பழக்கம் கொண்டவர்களாகவோ அற்றவர்களாகவோ இருந்த போதிலும் கூடிய கவனத்தோடேயே மதுபானத்தைத் தொடவேண்டும். என்பது புலனாகின்றது விசேடவிதமாக பெற்றோர்கள் தங்கள் பரம்பரையிலே குடிப்பழக்கம் கொண்டிருந்தால் இதனைப் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறி அவ்வாறான பழக்கத்திலிருந்து ஆரம்பத்திலேயே அவர்கள் தங்களைத் தவிர்த்துக் கொள்ள உதவுதல் வேண்டும்.

குடிப்பழக்கம் என்னில் உண்டு அன்றேல் உருவாகின்றது என்பதை அறிய வழி

குடிப்பழக்கத்தைத் தவிர்க்க வளர்ச்சி அடைந்திருக்கும் இன்றைய அறிவின் வழி, குடிப்பழக்கம் கொண்ட ஒவ்வொரு பத்துப் பேரிலும் ஏழுபேர், எதுவிதமான மருத்துவ பரிசோதனையும் இன்றி தாங்கள் குடிப்பழக்கம் கொண்டவர்களா அன்றேல் இவ்வழி உருவாகி வருகின்றனரா என்பதை அறியக்கூடியதாக உள்ளது. அதற்கு பின்வரும் வினாக்கள் எடிக்கு உதவியளிக்கின்றன, பின்வரும் வினாக்களில்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுக்காவது ''ஆம்'' என்று விடையை ஒருவர் அளிக்கக்கூடியதாக இருக்குமாயின் தனது நிலையையும் பழக்கத்தையும் இட்டுச் சிந்திக்க வேண்டியவராக இருக்கின்றார்.

1 நாளாந்தம் ஒரு குறிப்பிட்ட வேளையிலே மதுபானம் அருந்த வேண்டும் என்று தவிக்கின்றீரா?

2 வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வி அன்றேல் தோல்வி மனப்பான்மையைப் போக்குவதற்காக மது அருந்துகின்றீரா?

3 களைப்பைக் களைய மது அருந்தும் வழக்கம் உம்மில் உண்டா?

4 நீர் பாவிக்கும் மதுபானம் உமது குடும்ப வாழ்வின் அமைதியைக் குலைக்கின்றதா?

5 தனிமையாக மதுபானம் அருந்த விரும்புகின்றீரா?

6 அடுத்த நாள் அதிகாலையிலும் அருந்தவேண்டும் என்ற எண்ணம் உமது உள்ளத்தில் எழுவதுண்டா?

குடிப்பழக்கத்தை விடுவது எப்படி?

குடிப்பழக்கம் ஒருவரை விட்டு அகலவேண்டுமேயாகில் முதலில் அவர் அதனை அகற்ற முயற்சிக்க வேண்டும். அதே வேளையில் அயலவரும் அவரோடு ஒத்துழைக்க வேண்டும்,

''எனது குடிப்பழக்கத்தை விடுவதற்காக அயலவரின் ,உதவியை நாடப் போகின்றேன் என்று முடிவை எடுப்பதே எனது வாழ்க்கையில் நான் எதிர்நோக்கிய பெரும் கஷ்டமான நிலை'' என்று மதுப்பழக்கத்தடை இயக்கத்திலே (A. A.) ஒருவர் ஒருமுறை கூறினாராம்.

குடிப்பழக்கத்திலே ஊறியிருப்பவர்கள் அயலவரையோ அன்றேல் சமுதாயத்தையோ பழிகூறுவதால் எதுவிதமான பயனும் கிட்டாது. குடிப்பழக்கம் என்பது தனிப்பட்ட நபர் கொண்டுள்ள வியாதி. அந்த வியாதி அவரைவிட்டு அகல வேண்டுமாயின் முதற்கண் அயலவரை நோவதை விடுத்து தன் வியாதியை அகற்ற அவர் முயற்சிக்க வேண்டும்; தான் விரும்ப வேண்டும். அப்படிப்பட்ட உணர்வுகள் தன்னுள்ளத்திலே ஊற்றெடுக்கும் மட்டும் அயலவர்களால் ஒன்றுமே செய்ய முடியாது.

அதே வேளையில் குடிப்பழக்கத்திலிருந்து ஒருவர் விடுபட வேண்டுமேயானால் நாமும் அவர் மட்டில் கருணைகொண்டவர்களாக மாற வேண்டும். குடிப்பழக்கம் ஒரு வியாதி என்பதை அறியாத அவர்களைக் கருணைக்கண் கொண்டு நோக்காது சிந்தனையற்ற வார்த்தைகளை அள்ளி எறிவது அப்படிப்பட்டவர்களை ஆக்கப்பாதையில் அழைத்துக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதற்குப் பதிலாக அழிவுக்கே இட்டுச்செல்லும் அவர்களது உள்ளத்தை மேலும் மேலும் புண்படுத்துவதாக அமைந்து விடும் அவர்களது பழக்கத்தை வலுப்படுத்துவதாக அமைந்துவிடும்.

ஆகவே, அவர்கள் மட்டில் எமது உதவி முறையானதாக அமைய வேண்டுமேயாகில் முதற்கண் குடிப்பழக்கம் என்ற வியாதியைப் பற்றி நாம் நன்கு அறிந்தும் அதிலே ஊறியிருந்து அப்பழக்கத்தைக் கைவிட்டவர்களின் ஆலோசனையைக் கேட்டும் அதன்படி குடிப்பழக்கம் கொண்டோர் திருந்தி வாழ வழியை அமைத்துக் கொடுத்தல் அவசியமாகின்றது.

---

# போதை வந்த போது......

தரிசன சித்திரம் - 6

மழை தூத்தலும் தூமியுமாக நசநசத்து
மண்ணில் விழுந்து - புழுதியை குழைத்ததால்
மண் வாசனை கம கமத்தது..........
'தலை மாரி'யின் வருகை...........
மனதுக்கு இதமாக...........பதமாக...........
பிற்பகல் நாலு மணியிருக்கும்!
பக்கத்து வீட்டு —
'மனிதன்' வந்து விட்டான்!
வழமைபோல் 'அது' உள் நுழைந்தான்
பிரதிபலிப்பு .....மதயானை காட்டு மிருகங்களை
அமுக்கு நொருக்கி அவசம் செய்ய
அட்டகாசம் கொள்ளுமே.........அப்படி ஒரு
நிலைப்பாடு...........இதுஅன்றாட நாடகந்தான்
ஆனால் செயற்பாடுகள்தான் நாளுக்கு நாள்
வித்தியாசமானவை!
இன்று...........
கடலல் படலை அவலமாகக் கிறீச்சிடுகின்றது
'அப்பா வந்திட்டுது.........அப்பா வந்திட்டுது'
திண்ணையில் இருந்து 'சந்தானங்களின்'
'குசு குசுப்புக்கள்'.........மனிதனின் மிரட்டலுக்கு
பழகிப்போன மனங்கள்.........மூகங்கள்...........
ஆயுள் பூராவும் வறுமையை தரிசித்து
மரத்துப் போன ஏழைகளின் மனோநிலை போல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் பிழைப்புக்குத்தான் சென்று வருகிறான்
ஊரில் 'பிரபல மேசன்' என்ற புகழ்!
'தொழில் ஆயுதங்கள்' குசினியோரமாக
கை நழுவி விழுகின்ற சப்தம்!
"எங்கடா போயிற்றான் அவள்"? மனிதன்
உறுமுகிறான், மகளுக்கு 'அவளை' விளங்கிவிட்டது.
"ஆரு, அம்மாவா?.........அம்மா வேப்பங்
கொட்டை புறக்கப் போயிற்று"
"இந்த மழைக்க என்னடா கண்டறியாத கொட்டை
புறக்கிறது.........அவளுக்கு 'ஊர்த்துளாவாரம்'
செய்யிற வேலை கூடிப் போச்சுது.........வரட்டும்
இண்டைக்கு.........காலை முறிச்சு வீட்டுக்க
கிடத்தி விடுறன்!" – மனிதன் முக்காரத் தொனியி
டுகின்றான். 'அது' உள்ளிருக்கும் உற்சாகத்தில்
மனிதன் போடுகின்ற 'சபதங்கள்' நிஜமாக நடை
பெறுவதாக இருந்தால் மனைவி மக்கள் எல்லோருமே
சவக்காலை மண்ணுக்குள்தான் இருப்பார்கள்!
அசல் வெறும் வாய்ச்சவடால்தான்!
'அது' உள்இறங்காத – நிதான சுவாதீன நிலையில்
மனிதனுக்கு காரசாரமான திட்டுக்கள் தாராளமாக
கிடைக்கும் – – அவ்வேளைகளில் 'மனிதன்' மனஸ்தாபம்
படும் பாவிபோல – – மனைவியின் முகத்தைத் தரிசிக்க
முடியாமல் தலைகுனிந்து இருப்பான்! – இயல்பான பயம்!
இது காலை வேளை சங்கதி!
மனிதனின் மிரட்டல் தொடருகின்றது
"குமர் எங்கடா?" – குமர்! – – மனிதனின்
மூத்த மகள்!
"அக்கா இஞ்சதான் நிண்டது எங்க
போச்சுதெண்டு தெரியேல........"
"அவள்தான் போறதெண்டு பாத்தா..........
அந்தக் குமரையும் ஊர் உலாத்த
பழக்கிப் போட்டாள்.........எல்லாரும் வரட்டும்
இண்டைக்கு!' – மனிதன் குமுறுகிறான்.... ......
இல்லை.........உள்ளிருக்கும் 'அது' குமறவைக்
கிறது! "வா"......"ஓ"......"பு" தூசணைகள்
இடையிடையே உதிருகின்றன!
"கறி என்னடா பகல்?" சத்தம் குசினிக்
குள்ளிருந்து.........
"கறி புளியாணம்'.........இண்டைக்கு
மீன்காரன் ஒருத்தரும் வரயில்லை"!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையன்தான் விடை சுக்கிறுன்
"எப்ப பாத்தாலும் புளியாணம்......சம்பல்
தேங்காய் பூ.........த்தூ!...ஒரு நாளிலையா
வது...ஆனமான கறி காய்ச்சத் தெரியாத
நாய்ச் சாதி! "......
கறிச்சட்டி வளவு வேலிக்குள் 'பறந்து'
போய் விழுகின்றது
தொடர்ந்து.........
சோற்றுப்பானை – அது அலுமினியத் தாலானது
தண்ணீர்ச் செம்பு.........கேத்தில்! இப்படியான
அடுக்களை 'தஸ்தாவேஜிக்கள்' முற்றத்தை
வேகமாக முத்தமிடுகின்றன
மனிதனின் 'சங்காரம்' நர்த்தனமாகி.........
கரிச்சட்டி உடைந்து தூள் தூளாகி.........
'தனியொருவனுக்கு உணவில்லையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம் – என்ற
புதுமைக் கவிஞனின் புகழ் பாடும்
இந்நாளில்.........
இந்த வீட்டில......இந்த மனிதனின்
'தனியொருவனுக்கு கறியில்லையெனில்
சட்டியை உதைத்திடுவோம்' என்ற
சங்கநாதம் !
ஒரு புள்ளையும் இங்கு இருக்கக் கூடாது
மீண்டும் சத்தம்
மனிதன் பெற்றெடுத்த + புதினம்பபார்க்கக் கூடி
விட்ட — குஞ்சுகுருமான்கள்.........வெடி பொலி கேட்ட
சித்தெறும்புகளாக சிதறியோடுகின்றன.........
ஒரு சுழகாற்று சுழன்றடித்து ஓய்வுகண்ட
நிலை!
'அவள் வரட்டும் இண்டைக்கு – மனைவிக்கு செய்ய
போகும் வீரச் செயல்களுக்கு 'அவுட்லைன்' கீறுகின்ற
பாணியில் 'அவள் வரட்டும்' — என்ற
வாக்கியம் அடிக்கடி எழுந்து தணிகின்றது —
மனிதன் திண்ணையில் சாய்ந்து விட்டான்
போதும் — அமளி சிறுத்து அமைதி!
வெளியில் மழை சிணு சிணுத்துக் கொண்டுதான்
இருந்தது
வானை மெங்கும் கருமேகப் போர்வை
அஸ்தமனத்துக்கு முன்பே இருட்டி விட்ட
பிரேமை.........தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித்தியாலம் ஒன்று நழுவியிருக்கும்
சிதறியோடிய மனிதனின் "குஞ்சுகள்"
திண்ணைக்குள் மீண்டும் வந்து விட்டனர்
இருட்டி விட்டது!
"ஆ......அம்மா வருது" ......அம்மா வருது"
மனிதனின் கடைக் குட்டி "பெண் குஞ்சு"
ஆர்ப்பரிக்கின்றது
'அம்மா வருது' என்ற குரல் மனிதனின்
காதுக்குள் புகுந்திருக்க வேண்டும்......
அதன் வெளிப்பாடு உத்துதலால்......
மனிதன்
முற்றத்தில் வீசியெறிந்த அடுக்களை தஸ்தாவேஜுகளை
ஒவ்வொன்றாக பொறுக்கி......குசினிக்குள் போவதும்
வருவதுமாக.... மனிதனை பார்க்க சிரிப்பாகவும்
இருந்தது: பரிதாபமாகவும் இருந்தது......ஏனெனில்
'போதை' வேகமற்ற நிலையில் மனிதன் மனைவிக்கு அடங்கிய
பெட்டிப் பாம்பு! இன்று கறிச்சட்டிக்காக காரசாரமான
'அர்ச்சனை' குடிக்கத்தான் போகிறான் மனிதன்

— எஸ், டேவிட் —

---

## கைதியின் கைதியே!

— முரளி —

புட்டிச் சிறையில்
கைதியாம்
மது! — அதனுடன்
உடல் பிணைந்து
உளம் பிணைந்து
உயிர் பிணைந்த
நீயுமொரு கைதியாகி......
விஷப்பரீட்சை ஏன்?
சிநேகிதனே! –
உன் போதையால்
மனைவி மக்கள்
விழிக் குளத்தில்
வெள்ளங்களை பார்!
போதை –
மதுவில் விட
மழலையிலதிகம்

இன்பம் –
"பாட்டிலி"ல் விட
பாட்டினில் அதிகம்

கள் போத்தலுன்
கவலைகளை தணியாது
காற்றோடு கலக்கவிடு!

தென்னை திராட்சைகளை
தீயவர்களாக்காமல்
திருந்தி வாழ்ந்திடு –

அப்படியானால் – நீ
தானே ஒரு
மனித ஆத்மா
அல்ல – மகாத்மா!

நன்றி:- அட்டைப்படம் வட பிரதேச நல்லொழுக்க இயக்க சம்மேளனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருட்கள்

— அருட்செல்வன் ரூபன் —

இன்றைய நவீன சமுதாயத்திலே போதைப்பொருட்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. போதைப்பொருட்கள் இன்றைய சமூகத்தினை ஆட்டிப்படைக்கின்றன. போதைப் பொருட்கள் என்று கூறும் பொழுது போதைத் தன்மையைத் தம்முள் அடக்கிய பொருட்களையே நாம் கருதுகின்றோம். போதைப் பொருட்களுக்குப் பலரும் பலவிதமான வரைவிலக்கணங்களைக் கொடுத்தாலும் "போதைப் பொருட்கள் உயிர்வாழ்வனவற்றைத் தம் சுயநிலையிலிருந்து ஒரு போதை நிலைக்கு எடுத்துச் செல்கின்றன" என்பதுதான் மிகவும் பொருத்தமான வரைவிலக்கணமாகும்.

எப்பொழுது மனிதன் போதைப்பொருட்களை முதலில் பாவிக்கத் தொடங்கினான் என்று பார்க்கையில் இந்திய மெய்யியலாளர் கருத்துப்படி மனிதன் நாகரீகம் அடையாது காட்டுமிராண்டிக் சோலத்தில் காடுகளில் ஓடித்திரிந்த காலத்திலேயே காட்டில் சில இலை கொடிகளைப் போதைப் பொருட்களாக உபயோகித்திருக்கின்றான் என்பது புலனாகின்றது. அமெரிக்க சமூகவியலறிஞர் பேணாட் பாபர், 'மனித சமுதாயம் ஆரம்பித்த காலத்திலிருந்து போதைப் பொருட்கள் மனித சமுதாயத்துடன் பின்னிப் பிணைந்துவிட்டது. இன்று மனிதன் எங்கேயும், எப்பொழுதும், எப்படியும் போதைப் பொருட்களுடன் தான் இருக்கின்றான், மனிதன் இருக்கும்வரை போதைப் பொருட்களும் இருக்கத்தான் செய்கின்றன'' என்கின்றார்,

ஒருவகைக் இராயனப் பொருட்கள், கனிப் பொருட்கள், பக்ரீறியாக்கள், விலங்குகள், செடிகொடிகள், என்பவற்றிலிருந்து போதைப் பொருட்கள் செய்யப்படுகின்றன. இவை சரியான வகையிலும் உரிய அளவிலும் பாவிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் அவை உயிருக்கே ஆபத்தை விளைவிப்பவையாக மாறிவிடும். எனவேதான் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகள் போதைப் பொருட்களை உற்பத்தி செய்வதுடன் அவற்றின் நன்மை தீமை பற்றியும் கூடுதலாக விளம்பரம் செய்கின்றன. இவை ஈரல்' சிறுநீரகம், தசைநார்கள் இனவிருத்தி உறுப்புக்கள் போன்ற முக்கிய பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இன்னும் கோப்பி, கொக்கோ, புகையிலை என்பன கூட அளவுக்கு மிஞ்சி பாவிக்கப்படும் பொழுது போதைப்பொருட்களாகி உடலுக்குத் தீங்கு விளைவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றில், எமது சமுதாயத்தில் அன்பும் அந்த அன்பினால் வரும் உறவும் விலைமதிப்பற்றவையாகக் கருதப்படுகின்றன என்பதே உண்மை, தனிமை, துயரம், கைவிடப்பட்ட நிலை போன்ற நேரங்களிலெல்லாம் அன்புதான் துணைநின்று உதவுகின்றது. ஆனால் போதைப்பொருட்களே இச்சமுதாயத்துக்கு அடிப்படையாகக் தேவைப் படும் அன்பையே இல்லாமல் செய்து போதைக்கு அடிமையாக்கிவிடு கின்றது. மனித வாழ்க்கையில் துன்பம், துயரம், தனிமை, பயம் ஏமாற்றம் என்பவை எல்லாம் சாதாரணமானவைதாம், ஆனால் அவற்றின் துக்கத்தைத் தாங்க முடியாத மனிதனே போதைப்பொருட் களிடம் தஞ்சமடைகின்றான், அவற்றிக்கு அடிமையாகின்றான்.

எனவே, மனிதன் தன்னைத்தானே இவ்வடிமைத்தனத்திலிருந்து விடுவித்துக்கொள்ளலே வாழ்வின் வளர்ச்சிக்கு வளமான வாழ்வுக்கு வழிகோலாகின்றது போதையில் மயங்குவதைவிட அன்பில் மயங்குவதே அனைத்து துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் அருமருந்தாகும்

---

# ஏன் இந்த வாழ்க்கையடா?

வண்ணமிக்க மலர்களின் தேனுண்ட போதையிலே வண்டுகள்
எண்ணமதில் இன்பம் பொங்கிடும் பண்படுகின்றனவே
விந்தைமிக்க மனிதா நீ வேண்டாப் பொருளின் போதையாலே
சிந்தைகெங்கி கலங்கி சிந்து பாடுகின்றயே

வாழ்க்கை யென்னும் படகிற்கு மதியென்னும் துடுப்புண்டு - அதனை
போதையென்றும் ஆற்றுப்பெருகினுள் இழுந்து தவிக்காதே
நாளையவுலகம் உன்னை நம்பியிருக்கையில் - அதனை நீ
நனைந்த போதையிலே அள்ளுண்டு செல்லவிடாதே

பட்டினிக்குத் தீனியின்றி உடல்லாடி நிற்கையில் போதையேற்ற
வட்டிக்கு காசுக்கலையும் மானிடப்பதரே
தாரமும் தாலியறுக்கப்பட்டு நடுத்தெருவிலே தவிப்பதால் - பூமியில்
தரமுள்ள சமுதாயம் தோன்றுமோ உன்னாலே

படித்த கல்வி பாதை விட்டு பாலைவனத்திலே நடத்திடுமே - போதை
படித்தாண்டின் பூ போன்ற மனமும் வாடியுலர்ந்து வரண்டிடுமே
ஏன் இந்த தோற்றமடா ஏனிந்த வாழ்க்கையடா - சிந்தையில்
ஏன் உனக்கு அர்த்தமில்லா இன்பத்தில் போதையடா

நிர்வாண உலகமிதில் நிர்வாண இன்பமேயுண்டு - அதை
நிர்ப்பந்தமான போதைகொண்டு பெறுதல் நிம்மதியாகுமோடா
மாய இன்பத்தினின்று விடுதலை! வேண்டின்
போதையென்னும் சிறையுடைந்து வெளிவாடா

— ப. யோசப் பாக்கியராஜா —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments from

# ANTON ELECTRICS

No 22, PRINCE STREET,

**COLOMBO - 11**

Tel - 28954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments

from

# PEARLITES

DEALERS IN ELECTRICAL GOODT

**78, Maliban Street,**

COLOMBO - 11

TEL – 24821 – 28244


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பூங்கா ★ ★ ★ ★

நீ வேண்டும்

"நான்......நீ என்ற கவிதையின் மூலம் அன்பு புரிந்துகொள்ளல் ஏற்றுக்கொள்ளல் ஆளுமையின் வளர்ச்சி போன்ற கருத்துகளைத் தொகுத்து கவிதை வடிவிலே உள்ளத்தை தொடும் வகையிலே "நான்" படிக்கும் நான்களின் ஆவலைத் தூண்டி 'நானில்' நீயைக் காணத்துடிக்கும் அருட் செல்வன் இ. ஸ்டானிஸுக்கு என் உளமார்ந்த பாராட்டுக்கள். அவர் தன் படைப்புக்களின் மூலம் விரைவாக நீயைக் காண்பார் என்பதே என் எதிர்பார்ப்பு.

R. இந்திரா
பண்டத்தரிப்பு

பூரிப்பு

சிலிமாப் போடும் புத்தகத்தின் அளவிலிருந்து உன் தோற்றம் மாற்றியமைக்கப்படாதா என்ற என் ஏக்கம் ஆடி - ஆவணி இதழுடன் பூர்த்தி செய்யப்பட்டது.

பா. புஷ்பம்
வெளிய விளான்

JAFFNA MEDICT... MUSEUM ... LIBRARY

என் ஆசை

பல காத்திரமான அறிவியல் உளவியல் சார்ந்த படைப்புக்களை அளித்திடும் "நான்" இன் பணி பாராட்டுக்குரியது இது போன்ற பல சஞ்சிகைகள் தமிழில் வெளிவர வேண்டும் என்பதே என் ஆசை.

கோகிலா மகேந்திரன்
தெல்லிப்பழை

ஈர்ப்பு

"நான்" இன் இறுதி இதழ்களில் சில என் கவனத்தை ஈர்ந்துள்ளன இதன் உளவியற்போக்கு பாராட்டத்தக்கது.

ஆ. ஐங்கரதாசன்
கல்முனை

பாராட்டு

சுவையாக "அறுவடை" செய்த எஸ். டேவிட்டிற்கு என் பாராட்டுக்கள்

ஜீ. ஜீ. சிவி
பரந்தன்

நன்றிகள்

உடல் வளர்ச்சி ஆளுமை வளர்ச்சியா? என்பது பற்றி தெளிவாக விளக்கிய விஜயகுமாருக்கும் தொடர்பு சாதனங்கள் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை எடுத்தியம்பிய சுப்ரமணிய முரளிக்கும் நன்றிகள்

R தங்கராணி
செம்பியன்பற்று

வாசிப்பதற்கல்ல

'எம்' வாழ்வின் வளர்ச்சிக்காக வெளிவரும் 'நான்' ஐ ஏனைய சஞ்சிகைகள் போல் வாசிப்பதற்கு மட்டும் பயன்படுத்தாது வாழப் பயன்படுத்த வேண்டும்.

ஆன் சித்தியா
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

**SITHYS ELECTRICALS**

86, FIRST CROSS STREET,

**COLOMBO - 11**

*T. Phone - 547526*

**with best compliments from**

# JAYANTHI ELECTRICALS

**56. Maliban Street**

COLOMBO

*TELE. – 548335*

JAFFNA MEDICAL MUSEUM * JAFFNA TEACHING HOSPITAL *

Lakeview Printers, 245/3 A. D. S. Senanayake Vidiya, Kandy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org